22nd August 1960]

SRI S. M. ANNAMALAI : இம்மாதிரிப் பண்ணைகள் 6 இடங்களில் இருப்பதாகச் சொன்னார்கள். எங்கெங்கே என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நாலு " பாரம்கள் " திருநெல்வேலி ஜில்லாவில் அபிஷேகப்பட்டியிலும், திருச்சிராப் பள்ளி ஜில்லாவில் துவக்குடியிலும், கோயமுத்தூர் ஜில்லாவில் வீரபாண்டியிலும், ராமநாதபுரம் ஜில்லாவில் விருதுநகரிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற இரண்டு பண்ணைகளைப் பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

SRI V. SUBBIAH : கோவில்பட்டி தாலுகா ஒட்டப் பிடாரம் என்னும் இடத்தில் அம்மாதிரிப் பண்ணை இருக்கிறதா? அது என்ன நிலையில் இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதுபற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

SRI S. M. ANNAMALAI: மற்ற இரண்டு பண்ணைகளைப் பற்றித் தகவல் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரண்டு பண்ணைகளைப் பற்றி தகவல் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? இந்த இரண்டு பண்ணைகளை வேறு எங்காகிலும் ஆரம்பிப்பதற்குச் சர்க்கார் உத்தேசிப்பார்களா ? அல்லது அவைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சர்க்காரிலே பண்ணைகள் நடத்துகிறார்கள். அதுமாதிரிப் பண்ணை சென்னை நகரத்திற்கு அண்மையில் ஒரு இடத்தில் நடத்தப்படுகிறது. என்னிடம் மூலக் கேள்விகளைப்பற்றிய தகவல் இருந்தனவே தவிர மற்ற தகவல்கள் இல்லை என்றுதான் சொன்னேனே தவிர இது பற்றி ஒன்றும் அரசாங்கத்திற்குத் தெரியாது என்று அர்த்தமல்ல.

Murders in Tiruvannamalai and Chengam taluks

* 363 *Q.*—SRI S. M. ANNAMALAI : (on behalf of Sri P. U. SHANMUGAM): கனம் உள்விவகார அமைச்சரவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை, செங்கம் தாலூகாவில் கடந்த மூன்று ஆண்டுகளில் எத்தனை கொலைகள் நடைபெற்றன ?

(ஆ) அவைகளில் எத்தனை இன்னும் துப்பு துலக்கப் படாமல் இருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 10 in 1957; 8 in 1958; 6 in 1959; and 3 in 1960 up to date.

(*b*) 2 in 1957 and 2 in 1959.

SRI A. A. RASHEED : Sir, is it a fact that murders in North Arcot district have been on the increase in recent years? If so may I know the reason, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may draw his own conclusion. I have just furnished the particulars about it.

[22nd August 1960

SRI S. M. ANNAMALAI: துப்பு துலக்கப்படுவது மிகவும் குறைவாக இருக்கிறதே? துப்பு துலக்குவதற்கு இங்கிருந்து ஏதாகிலும் போலீஸ் நாய்கள் அழைத்துச் செல்லப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: துப்புக் கண்டு பிடிப்பது என்பது ஒன்றும் குறைவாக இருப்பதாக நான் ஒப்புக்கொள்ளவில்லை.

Kandamanur-Varushnad road

*364 *Q.*—SRI A. VEDARATHNAM (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-ல் மதுரை ஜில்லாவில் ஆதிவாசிகள் நலனுக்காக எத்தனை ரோடுகள் போட திட்டமிடப்பட்டன?

(ஆ) அதில் எத்தனை ரோடுகள் போடப்பட்டன?

(இ) மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுகா கண்டமனூரிலிருந்து, வருஷநாடுவரை ரோடு போடத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்திருந்தும் அந்த வேலை நடக்காத காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Only Village Communications intended to serve villages are sanctioned and are under execution. No specific road scheme has been sanctioned for the benefit of aboriginals in Madurai district.

(*b*) Does not arise.

(*c*) There is no such proposal in the Second Five-Year Plan.

SRI V. SUBBIAH: இந்த ரோடானது மிக வளம் பொருந்திய மணல் வளம் உள்ள வருஷநாடு மலைப் பிரதேசத்தையும் ராமநாதபுரம் ஜில்லா உத்தராயிருப்பையும் இணைக்கக்கூடியதாக இருக்கும் ரோடாகையால், அதை அம்மாதிரி இணைப்பதற்கு அரசாங்கத்தினிடம் திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் அது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

Inscriptions discovered in Panmozhi firka

*365 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்காசி தாலுகா பன்மொழி பிர்க்கா, குத்துக்கால் வலசை கிராமத்தில் சமீபத்தில் புராதன கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்டதா?

(ஆ) கல்வெட்டு ஆராய்ச்சி நிபுணர்கள் அதைப்பற்றிக் கூறும் விவரமென்ன?